இணைப்பு-3.

(486-ஆம் பக்கத்தில் 94-ஆம் எண்ணுள்ள வெள்விக்குறியிட்ட வினவிற் குரிய விடையைக் காண்க.)

விவர அறிக்கை.

(அ) ஆம்.

(இ) மதுரையிலுள்ள இயல் கண் சிகிச்சைப் பிரிவுகளால் ஆண்டுதோறும் 24 கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

முதலில், கண் சிகிச்சை முகாம் நடத்துவதற்காக பள்ளி அல்லது கல்லூரிக் கட்டிடம் போன்று ஒரு பொருத்தமான இடம் தெரிந்தெடுக்கப்படுகிறது. பின்னர் முகாமை நடத்துவதற்கு வசதியான ஏற்பாடு செய்யப்படுகிறது. முகாமுக்குத் தேவையான வசதிகள் அனைத்துக்கும் வகை செய்யப்படுகிறது. பின்னர், கண் சிகிச்சை முகாம் நடத்தப்படுவது பற்றி, 20-லிருந்து 30 மைல் சுற்றளவுக்குட்பட்ட பகுதியில், வண்டியொன்றில் ஒலி பெருக்கிகள் வைத்துப் பிரசாரம் செய்யப்படுகிறது. இதுபோல, சுவரொட்டிகள், துண்டு விளம்பரங்கள், வானொலிப்பெட்டிகள் முதலியவை மூலமும், பறையறைதல் மூலமும் இதுபோல பிரச்சாரம் செய்யப்படுகிறது. கண்-அறுவைச் சிகிச்சை செய்யப்படுவதுடன் கூட, கண்ணடிப் போட்டுக்கொள்வதற்காகக் கண் பரிசோதனையும் செய்யப்படும் என்றும் மக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. கண் சிகிச்சை முகாமில், கண்ணில் மாசி அகற்றுதல் (Excision of Pterygium) கண்ணீர்ப்பைகளை அகற்றுதல் (Excision of Lacrinealsacs) போன்ற சிறு அறுவைச் சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன. இம்முகாம், வழக்கமாக ஒரு சனிக்கிழமை அன்று தொடங்குகிறது. அன்று கண் நோயாளிகள் அனைவரும் பரிசோதனை செய்யப் படுவர். மறுநாள் ஞாயிற்றுக்கிழமையன்று, கண்ணில் வளரும் சதையை அகற்றும் அறுவை சிகிச்சைகள் (Cataract operation) செய்யப்படுகின்றன. அறுவை சிகிச்சை செய்தபின் இரண்டாம் நாளில், கண்கள் பரிசோதனை செய்யப்பட்டு, நச்சுக்கிருமிகளைக் கொல்லும் மருந்துகள் (Antibiotics) போடப்படுகின்றன. ஏழாம் நாள் முடிவில் (அறுவைச் சிகிச்சைக்) காயங்கள் ஆறிவிடுகின்றன. நோயாளிகள் வீட்டுக்கு அனுப்பப்படுகின்றனர். சிக்கலான நேர்வுகளில் மேலும் சிகிச்சை அளிக்கப்படுவதற்காக, நோயாளிகள், மதுரையிலுள்ள கண் சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டுவரப்படுகின்றனர்.